முருகப்பெருமான் துணை

**மகான் தாயுமானசுவாமிகள் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**02.12.2022**, வெள்ளிக்கிழமை

1. தரும ஞான வேலி கொண்ட
தவசியே ஆறுமுக அரங்கனே
வறுமை வென்று உலகை மீட்க
வள்ளலாய் மீட்க வந்த தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அனுகூல ஆசி
ஆசிதனை சுபகிருது தேள் திங்கள்
அறிவிக்க மூவையோர் திகதி புகர் வாரம்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 16 ம் நாள் 02.12.2022, வெள்ளிக்கிழமை)
3. வாரமதில் தாயுமான சுவாமிகள் யானும்
வழங்குவேன் உலகோர் நலம்பெற
சோரமில்லா வளர்ச்சிதனை காண
செகமெங்கும் உலகமக்களை நோக்கி
4. நோக்கியே கருணைபட தீட்சை
ஞானமாக அருளி தேற்ற
ஆக்கமுடன் அழைப்பு தந்து
ஆற்றல் மிக்க ஞானிகள் பூசை
5. பூசை நடத்தி அருள்புரிய
பூவுலகோர் பணிந்து வர
பூசைபலனாய் இயற்கை பலமும்
பொருள் வளமும் சகல பலமும்
6. பலமான ஞானத் தலைமையும்
பண்பானவர்கள் ஆளுமையும்
வலம்வர இந்தப் பேருலகம்
வளர்ச்சி மாற்றமும் கண்டடையும்
7. அடையவே இந்த அற்புதங்கள்
அரங்கமகான் ஆசியால் நடக்கும்
தடையற சர்வபலமும் கண்டு
தரணியில் ஞான ஆட்சி துவங்கும்
8. துவங்கவே கலியின் கொடுமைகள்
தீவினைகள் அனைத்தும் விலகி
அவனியில் எதிர்வினை அழிவு
அனைத்தும் அகன்றோடி சடுதி
9. சடுதி மாற்றம் சகல வகையும்
சற்குருவின் அருளாக வந்து
இடர்பேரிடர் ஏதும் அனுகா
எல்லா பாதுகாப்பும் கூடியே

10. கூடியே உலக மாற்றமாக
குருவரங்கனால் தேற்றம்தனை
நாடியே பேருலகம் அடைந்து
ஞானிகள் ஆட்சி அமையும்

11. அமைதி பாதுகாப்பு ஆனந்தமென
அளவிலா சகல பலமும் கூடி
அமைந்திடும் ஞானசித்தர் காலமாக
அறிவித்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–